# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண். 19/2014

2019 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22-ம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1 குணசேகர் என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.கே.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு வா.சா.1ன் கூடுதல் முதல் விசாரணை பிரமாண பத்திரம் தாக்கல் செய்யபட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை 1வது பிரதிவாதி தரப்பில் தொடர்ச்சி**

அரும்பாவூர் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் எனக்கு சேமிப்பு கணக்கு உள்ளது. இந்த வழக்கிற்கு முன்பு மேற்படி கணக்குக்கு அனுப்பபட்ட தொகைகள் சிவகுமாரால் அனுப்பபட்டது என்றால் சரி. சிவகுமார் துபாயில் இருந்தே வங்கி மூலம் பணத்தை அனுப்பியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த பணத்தை எங்கள் ஊரில் இருந்து வெளிநாட்டில் வேலை செய்தவர்கள் வீட்டிற்கு கொடுக்கும்படி சிவகுமார் எனக்கு அனுப்பி வைத்தார். பாங்க் ஆப் இந்தியா மலையாளபட்டி கிளையில் எனக்கு சேமிப்பு கணக்கு உள்ளது. அந்த வங்கி கணக்கு இந்த வழக்கிற்கு பின் ஏற்பட்டது என்றால் சரி. தழுதாழை கார்ப்பரேஷன் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளேன். அந்த வங்கி கணக்கும் இந்த வழக்கிற்கு பின் ஏற்பட்டது என்றால் சரி. நான் மேலே குறிப்பிட்ட 3 வங்கி கணக்குகளையும் எனக்கு வருமானம் இருப்பது போல ஒரு தோற்றத்தை உருவாக்க இந்த வழக்கிற்கு பின்பு இந்த வழக்கிற்காக ஏற்படுத்தபட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வங்கி கணக்குகள் அனைத்திலும் என்னுடைய பெயர் குணசேகர் என்று பதிவு செய்யபட்டுள்ளது என்றால் சரி. நான் வியாபாரம் செய்வதற்கு வரி அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை. அதற்கு உரிமம் பெறவில்லை. பதிவு செய்தால் வரி செலுத்த வேண்டும் என்பதால் பதிவு செய்யவில்லை. நான் விவசாயிகளிடம் பொருட்களை வாங்கியதற்கு ரசீது கொடுத்து அதன் நகல் வைத்திருக்கிறேனா என்றால் இல்லை. விவசாயிகளிடம் நேரடியாக வாங்கி வந்துவிடுவேன். நான் விவசாய பொருட்களை வாங்கி விற்று ஏற்பட்ட லாபம்

சம்பந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தாவா சொத்துக்களை கிரையம் செய்ய நான் எந்த தொகையும் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வேல்முருகன் மாடார்ன் ரைஸ் மில்லில் இருந்து தாக்கல் செய்யபட்டுள்ள பெரும்பாலான ரசீதுகள் இந்த வழக்கிற்கு பிறகு ஏற்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. அந்த ரசீதுகளில் சேகர் என்ற பெயர் உள்ளது என்றால் சரி. சேகர் என்று என்னை கூப்பிடுவார்கள் அதனால் அந்த பெயர் அதில் எழுதபட்டுள்ளது. நான் விசிடிங் கார்டு, ரசீதுகள் அனைத்தையும் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும் இந்த ரசீதுகளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சேகர் என்ற பெயருக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.38 அறிவிப்பை என்னுடைய தங்கைகள் பாகம் கேட்டு எனக்கு, என் அப்பாவிற்கு, என் தம்பிக்கு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரி. அந்த அறிவிப்பு சின்னராஜ் சொல்லி தான் அனுப்பியுள்ளார்கள். அவ்வாறு நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.37 மின்சார கட்டண ரசீதுகள் இவ்வழக்கிற்கு பின்பு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யபட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.36 வீட்டு வரி ரசீதுகளில் குறிப்பிடபட்டுள்ள வீட்டிற்கு என்னுடைய அப்பா பெயரிலும் வீட்டு வரி ரசீதுகள் வழங்கபட்டுள்ளது என்று சொன்னால் சரி. இந்த வீடு என்னுடைய அப்பாவிற்கு உரியது என்றாலும் இந்த வழக்கிற்காக என்னுடைய பெயரில் அந்த வீட்டிற்கு வரி ரசீதுகளை ஏற்படுத்தி கொண்டேன் என்று சொன்னால் தவறு. வா.சா.ஆ.32ல் உள்ள அரும்பாவூர் கிளை திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கியில் என் பெயரில் உள்ள சேமிப்பு கணக்கில் நான் பணம் போட்டு எடுக்கவில்லை என்று சொன்னால் சரி. அந்த வங்கியில் நான் லாக்கர் வைத்துள்ளேன். அதை நானும், சின்னராஜும் சேர்ந்து பயன்படுத்தும் வகையில் ஏற்படுத்தியுள்ளோம். லாக்கர் எண் 29ஏ ஆகும். லாக்கர் சம்பந்தமாக தனிபட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வழக்கு சொத்துக்கு நான் எந்த வகையிலும் பங்களிப்பு செய்யவில்லை என்றால் தவறு. வழக்கு

சொத்துக்களில் எனக்கு எந்த பாகமும் கிடைக்ககூடியது என்று சொன்னால் தவறு.